Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 150

சனிக்கிழமை
25 ஏப்ரல் 2026

சித்திரை 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## நாட்டில் இன்று பரவலாக மழை

கொழும்பு, ஏப். 25
நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த ஓரிரு நாள்களுக்கு மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் »11



அடிப்படைத் தேவைகளை உடன் நிறைவேற்றுக

## நெடுந்தீவுக்கு நீதிகேட்டு மக்கள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 25
நெடுந்தீவில் மிக நீண்டகாலமாக நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். »11

மயிலிட்டிக் காணிகளை விடுவிக்குமாறு

# இராணுவ முகாமுக்கு முன் மக்கள் நேற்றுப் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 25**

**மயிலிட்டியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, இராணுவ முகாமுக்கு முன்பாக மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.** »11



## காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசு உறுதி!

இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்தார்.
மயிலிட்டியில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட »11

## தமிழகப் பேரவைத் தேர்தல்; ஈழத்தமிழர்கள் வாக்களிப்பு

சென்னை, ஏப். 25
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஈழத்தமிழர்கள் 10 பேர் வாக்களித்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.
இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போரின்போது அகதிகளாகத் தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத்தமிழர்களுக்கு இன்னமும் அங்கு »11

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய

## உணவகத்துக்கு தண்டம் விதிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 25
வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம், உணவகம் மற்றும் பலசரக்குக் கடை என்பவற்றுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. »11

செவ்வாயன்று காணி அளவீடு

## மக்களுக்கு வழங்கவா? விகாரைக்குச் சுவீகரிக்கவா?

நேற்று வந்த கடிதத்தால் மக்களிடம் குழப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் எதிர்வரும் 28ஆம் திகதி அளவீடு செய்யப்படும் என காணிகளின் உரிமையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தக் காணி அளவீட்டு நடவடிக்கை திஸ்ஸ விகாரைக்காக காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நடவடிக்கையா என காணிகளின் உரிமையாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தால் காணிகளின் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தி »11

## ஆலயம் ஒன்றுக்கு அருகில் வயோதிபர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாணம் - பாசையூரில் உள்ள ஆலயமொன்றுக்கு முன்பாக வயோதிபர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
மனுவேற்பிள்ளை அமலதாஸ் (வயது-68) என்ற வயோதிபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள் »11



## மீண்டும் பற்றியது காக்கைதீவில் தீ!

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாணம் - காக்கைதீவுப் பகுதியில் நேற்று மீண்டும் தீ பரவிய நிலையில், அந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர். »11

தெல்லிப்பழை

## புற்றுநோய் மருத்துவருக்கு எதிராக எவ்வித அவதூறும் பரப்பக்கூடாது!

நிபந்தனையுடன் அர்ச்சுனா எம்.பி.க்குப் பிணை

யாழ்ப்பாணம், ஏப். 25
தெல்லிப்பழை புற்றுநோய் பிரிவு மருத்துவர் மீதான அவதூறு வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. மருத்துவருக்கு எதிராக அவதூறுகளைப் பரப்பக் கூடாது என்ற அடிப்படையிலேயே சொந்தப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.
தன்னைத் தொந்தரவு »11



முச்சந்தி முராளி

"சண்டை முடிஞ்சு கனகாலம் ஆனாலும் இன்னும் எல்லாத்துக்கும் போராட வேண்டியிருக்கு கண்டியளோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4411 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 19 29 46 80 |
| விசேட எழுத்து | U |

| ஹந்தஹரண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1478 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 31 32 39 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0437 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 2 8 1 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2517 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 36 37 48 63 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6169 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 8 8 9 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2199 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 22 43 52 60 |
| விசேட எழுத்து | S |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0285 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 28 32 64 |

# உள்ளூராட்சி சபைகள் ஊடாகவே வடக்கில் இனி மணல் விநியோகம்!

## விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர் பணிப்புரை

**யாழ்ப்பாணம், ஏப்.25**
**வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகள் ஊடாக மணல் விநியோகத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அதை உடனடியான நடைமுறைப்படுத்துமாறு, வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.**

வடக்கு மாகாண திணைக்களங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கூட்டத்தில், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணத் திறைசேரிக்கான நிதி வருவாயை அதிகரிப்பதற்கான புதிய பொறிமுறைகள், குறிப்பாக 'குடிபுகு சான்றிதழ்' பெறுவதை உறுதிப்படுத்தக் கண்காணிப்புப் பொறிமுறை, 'லஞ்ச்சீற்' கட்டுப்பாட்டு விவகாரத்தில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம், வாழையிலைப் பயன்பாட்டை ஊக்குவித்தல், சிறுவர் பூங்காக்களில் உள்ள விளையாட்டு உபகரணங்களின் தரம், பாதுகாப்பு மற்றும் அவற்றின் போதாமை, அதிகளவானோர் கூடும் பூங்காக்களின் தேவைகள், வீடமைப்புத் திட்டம், சுற்றுலாத்துறை, கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் காணி ஆணையாளர் அலுவலகங்களின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அதேவேளை வடக்கு மாகாணத்தில் நூறு ஆண்டுகளைக் கடந்த மரங்களின் விவரங்களைச் சேகரிக்கும் திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சார்பில் கலந்துகொண்ட பொன்னுத்துரை ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார். (க-66)



## போதையில் சாரத்தியம்: 90,000 ரூபா தண்டம்

கிளிநொச்சி,ஏப்.25
காப்புறுதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி, மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு எதிராக, கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையில் நீதிவானால் சாரதிக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (க-55)

## அமெ. - இலங்கை வர்த்தகம் மேம்படுத்த விசேட செயற்குழு

கொழும்பு, ஏப்.25
இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதையும், முதலீடுகளை ஊக்குவிப்பதையும் நோக்காகக் கொண்டு அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின்கீழ் 'அமெரிக்கா - இலங்கை வர்த்தக செயற்குழு' என்ற கட்டமைப்பு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலக வங்கியின் 2026ஆம் ஆண்டுக்கான வசந்தகாலக் கூட்டம் கடந்த வாரம் வொஷிங்டனில் அமைந்துள்ள உலக வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்றது.
இதில் பங்கேற்ற இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையிலான உயர்மட்டக் குழுவினர், அமெரிக்காவின் முன்னணி வர்த்தகத் துறைத் தலைவர்களுடன் தொடர் பேச்சுகளை முன்னெடுத்தனர்.
இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைவரம், பெரும் போகப் பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக ஆளுநர் நந்தலால் வீரசிங்க விரிவான விளக்கமளித்ததுடன் இலங்கையில் நிலவும் முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அமெரிக்க நிறுவனங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். இந்தச் சந்திப்புகளையடுத்து இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதையும், முதலீடுகளை ஊக்குவிப்பதையும் நோக்காகக்கொண்டு அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின்கீழ் 'அமெரிக்கா இலங்கை வர்த்தக செயற்குழு' என்ற கட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0877 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 2 1 5 7 0 8 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3143 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 25 55 64 80 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 12 39 71 49 |
| வெற்றி வாரம் | 5304 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0973 |
| வெற்றி இலக்கம் | 41 43 45 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| மிதுனம் | |
| வெற்றி இலக்கம் | 04 29 47 53 |
| சீட்டிழுப்பு வாரம் | 4855 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கம் | 05 13 33 38 |
| வெற்றி வாரம் | 2319 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 24.04.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 22 24 35 55 |
| வெற்றி வாரம் | 2969 |



## வெசாக் தானசாலைகளுக்கு புதிய வழிகாட்டல் வெளியீடு!

கொழும்பு, ஏப்.25
எதிர்வரும் வெசாக் மற்றும் பொஷன் பௌர்ணமி தினங்களை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் தானசாலைகளின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சுகாதார மற்றும் ஊடக அமைச்சினால் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
தன்சல்களை சுகாதாரமான முறையில் நடத்துவது குறித்து அமைப்பாளர்களுக்குத் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
தன்சல் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும், அது நிறைவடைந்த பின்னரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அந்த இடத்தைப் பார்வையிட்டு, சுற்றுச்சூழல் சுகாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## வெடிபொருள்களுடன் ஒருவர் கைது

அம்பாந்தோட்டை, ஏப்.25
அம்பாந்தோட்டை வீரகெட்டிய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது வெடிபொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தங்காலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் சோதனையிட்ட போதே இந்த வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
இதன்போது, 14 கிலோகிராம் வெடிமருந்துகள், 240 ஜெலி[illegible] நைட் குச்சிகள், 350 கிலோ[illegible]ராம் அமோனியா, 490 டெட்டனேட்டர்கள், 5,600 அடி நீளம் கொண்ட வெடிமருந்து நூல் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர் 57 [illegible] (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org



# புதினம் தெரியுமோ?

# உள்நாட்டு உற்பத்தி வருமானம் கடந்த ஆண்டில் அதீத வளர்ச்சி

## மத்திய வங்கி தகவல்

**கொழும்பு, ஏப்.25**

**2024ஆம் ஆண்டு 4,546 டொலராகப் பதிவாகியிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தலா வருமானம், கடந்த ஆண்டு 5,003 டொலராக உயர்வடைந்து வலுவான பொருளாதார வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள 2025ஆம் ஆண்டுக்கான பொருளாதாரமீளாய்வுஅறிக்கையின் பிரகாரம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி விரிவாக்கம் மற்றும் நடுத்தரகால சனத்தொகை வீழ்ச்சி என்பன இந்த உயர்வுக்குக் காரணமாக அமைந்திருப்பதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் 'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட பேரனர்த்தத்துக்கு மத்தியிலும், நாட்டின் நிலையான விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

நான்கு காலாண்டுகளுக்கும் மேல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தலா வருமானத்துக்கு நேர்மறையான பங்களிப்பை வழங்கியுள்ளது என்றும் மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உற்பத்தி மற்றும் நிர்மாண நடவடிக்கைகளை உள்ளடக்கிய கைத்தொழில் துறை ஒட்டுமொத்த விரிவாக்கத்துக்கு வழிவகுத்துள்ளது. அதேவேளை 2024 ஆம் ஆண்டு 30,095.8 பில்லியன் ரூபாவாகப் பதிவான சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2025 ஆம் ஆண்டு 32,750.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. மொத்தத் தேசிய வருமானம் 32,142.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்றும் மத்தியவங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

# யோஷித வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஏப்.25

பணமோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டி டெய்சி போரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 1,875 மில்லியன் ரூபா நிதி

யாழ்ப்பாணம், ஏப்.25

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக சுமார் ஆயிரத்து 875 மில்லியன் ரூபா நிதியில், உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டித்வா பேரிடர் மற்றும் பருவகால வெள்ளத்தால் சேதமடைந்த வடிகால்களைத் தூர்வாரிப் புனரமைக்கும் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், மாகாணத்திலுள்ள பிரதான மற்றும் நடுத்தரக் குளங்களின் நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தி, எதிர்வரும் சிறுபோகச் செய்கைக்குத் தேவையான நீரைத் தடையின்றி வழங்குவதற்கான அனைத்து ஒழுங்குகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-113)



# உலகளாவிய கூட்டாண்மையில் மாணவர்களின் போஷாக்குக்கு இலங்கைக்கு ஒரு மில். டொலர்

கொழும்பு, ஏப்.25

இலங்கை மாணவர்களின் போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்து, அவர்களின் கற்றல் மற்றும் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச லயன்ஸ் கழகமும், ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டமும் கைகோர்த்துள்ளன.

சர்வதேச லயன்ஸ் கழகம் மற்றும் ஐ.நா.க.உலக உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கிடையிலான 2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உலகளாவிய கூட்டாண்மையின் ஒரு பகுதியாக இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதில் இலங்கை உலக உணவுத் திட்ட அலுவலகம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த நிதியொதுக்கீடு உள்ளூர் விவசாயிகள் மற்றும் உணவு வழங்குநர்களை வலுப்படுத்துவதோடு உள்ளூர் உற்பத்தி மூலம் பாடசாலை உணவுத் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படும்.

அதேவேளை தற்போது இலங்கையிலுள்ள லயன்ஸ் கழக உறுப்பினர்களால் 400,000 அமெரிக்க டொலர் பெறுமதி [illegible] படு கிறது. (ச-இ)

# கிளிநொச்சி மருத்துவமனையில் மகப்பேற்று அனுமதியில் இழுபறி

கிளிநொச்சி,ஏப்.25

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில், வேறு இடங்களில் இருந்து வரும் கர்ப்பிணிகளை, மகப்பேற்றுக்கு அனுமதிப்பதில் நீண்ட இழுபறி நிலவுகின்றது. மருத்துவமனைக்கு மகப்பேற்றுக்காகச் செல்லும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகள் விடுதி அனுமதிக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் இருந்து மகப்பேற்றுக்காகச் சென்ற கர்ப்பிணி, மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் அழுத்தத்தையடுத்து, நீண்ட நேரத்தின் பின்னரே விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் அங்கு விடுதி அனுமதிக்குச் செல்லும் கர்ப்பிணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் வடமாகணத்துக்கான பெண் நோயியல் மருத்துவமனை அமைந்துள்ளபோதும். சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படாமல் பயன்பாடற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-55)

## சும்மா கிடந்த தொகுதியை....!

சும்மா கிடக்கிற சங்கை ஊதிக்கெடுக்காட்டி வீட்டுக் கட்சிக்காரருக்கு நித்திரை வராது போல. வீட்டுக்கட்சியில ஏற்கனவே தலைவரைத் தெரிவுசெய்தது பிழை எண்டு நீதிமன்றத்தில வழக்கு ஓடிக்கொண்டிருக்கு. அதால மத்திய குழுவிலேயே எல்லாரும் 'பதில்' பதவியிலதான் இருக்கினம். கிளையளால பொதுச்சபை உறுப்பினர்மாரைத் தெரிவுசெய்தது பிழை எண்டும், சில கிளையள் யாப்புக்கு முரணா புதிசா உருவாக்கினதெண்டும், அப்பிடி யாப்புக்கு முரணா தெரிவுசெய்த ஆக்கள் தலைவரைத் தெரிவுசெய்தது பிழை எண்டுதான் வழக்குப் போடுப்பட்டது. அதால தலைவர் தெரிவுக்கான வழக்கு முடியும் மட்டும், வீட்டுக்கட்சி எந்தத் தொகுதிக்கிளையையோ மூலக்கிளையையோ புதிசா தெரிவுசெய்ய ஏலாது. ஆனால் அதுக்கு மாறா யாழ்ப்பாணத்தில உள்ள, எங்கட நாட்டின்ர தலைவிதியையே மாத்தின தீர்மானம் ஒண்டைப் போட்ட தொகுதிக்கிளையைத் தெரிவுசெய்ய பதில் தலைவரும், பதில் செயலாளரும் போயிருக்கினம். ஏற்கனவே அந்தத் தொகுதி பதில் தலைவருக்குக் கீழதான் இயங்கிக் கொண்டிருக்கு. அதை அப்பிடியே விட்டிருக்கலாம். இல்லாட்டி இவ்வளவுகாலமும் பதில் பதவியளில இருந்தவையை தலைவர்,செயலாளர் எண்டு போட்டிட்டு வெளிக்கிட்டிருந்தால் கூட பிரச்சினை வந்திருக்காது. ஆனால் உப தலைவர் பதவிக்கு புதிசா ஒருத்தரை போட வெளிக்கிட, அங்க நிண்ட கட்சியின்ர மெம்பர்மார் கொந்தளிக்க வெளிக்கிட்டினம்.

"மத்திய குழுவிலயே எல்லாரும் பதில் பதவியளில தான் இருக்கினம். அப்ப என்னத்துக்கு இஞ்ச வந்து புதிசா ஆக்களை தெரிவு செய்யிறீங்கள்? இஞ்சையும் பதில் பதவியில உள்ளவையை வைச்சுக்கொண்டு கட்சியை நடத்தலாம் தானே? சரி, புதிசாப் பதவிக்கு போடேக்க, கட்சிக்காக வேலை செய்தவைக்குத்தானே முன்னுரிமை குடுக்க வேணும் . எங்கட தொகுதிக்கு தலைவர், செயலாளரா இப்ப தெரிவு செய்தவை கட்சிக்காக உழைச்சவை. ஆனால் உப தலைவரா போட வெளிக்கிட்டவர் என்ன செய்தவர்? நாங்கள் ஒவ்வொரு வீட்டுப் படலையாத் திறந்து கட்சிக்கு வாக்குப் பிச்சையெடுத்த போது, அவர் எங்க போனவர்?" எண்டு ஒரு உறுப்பினர் 'ஒருமையில' விளிச்சுச் சீற, அங்க அப்பிடியே ஒரு நிமிசம் மயான அமைதி . "வாக்குக் கேக்க நாங்கள் வேணும், ஆனா பதவி குடுக்கேக்க மட்டும் உங்களுக்கு வேண்டிய ஆக்களைத் தான் தூக்கி வைப்பீங்களோ?"எண்டு உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு கட்சியின்ர மேல்மட்டக்காராரிட்ட பதிலே இல்லை.

இதில இன்னுமொரு வில்லங்கமான விசயமும் இருக்காம். உபதலைவர் பதவிக்கு ஒருத்தரைத் தூக்கி வைக்கப் பாத்தவையெல்லோ. அவர் கிட்டடியில நல்ல மப்பில 'திசைகாட்டி' உறுப்பினரோட கேமை கேட்டிட்டு, அதே கோபத்தோட ஹெல்மெட்டும் போடாமல் மப்பில வாகனம் ஓடிக்கொண்டு போகேக்க, பொலிஸில அம்பிட்டிட்டாராம். பிறகு பைன் கட்டித்தான் வெளியில வந்தவர். ஏற்கனவே முல்லைத்தீவுல ஒரு தவிசாளர் போதையில விழுந்து கிடந்த படம் வந்ததால, அவரை கேட்டுக்கேள்வியில்லாமல் வீட்டுக் கட்சியை விட்டுத் தூக்கினவை. 'ஆர் பிழை செய்தாலும் எங்கட கட்சி பாரபட்சம் பாக்காமல் நடவடிக்கை எடுக்கும்'எண்டு அப்ப கொலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு வெள்ளைக்காரக் கதை சொன்னவை. ஆனால் இப்ப என்னெண்டால், இந்தத் தொகுதிக்கு மப்பில வாகனம் ஓடி பொலிஸில பிடிபட்டவருக்கு, உப தலைவர் பதவியைக்குடுக்க நினைக்கினம். இது எந்த வகையில நியாயம் எண்டும் கட்சியின்ர உறுப்பினர்மார் கேட்டிருக்கினம். இனியும் அங்க இருந்தால் சிக்கலாகிடும் எண்டிட்டு பதில் செயலாளர் நன்றியுரை கூட சொல்லாமல் நைசா மாறிட்டாராம்.

padsi@uthayan.com

பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திராப் பௌர்ணமி விரத உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.25

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை சித்திராப் பௌர்ணமி விரத உற்சவம் நடைபெறவுள்ளது.

அன்று காலை 9 மணி முதல் சித்திர குப்த நாயனார் புராண படனம் படிக்கப்பட்டுத் தொடர்ந்து சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடைபெறும். வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து நகுலேஸ்வரப் பெருமான் உள்வீதியுலா வருவார். மகேஸ்வரப் பூஜையைத் தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமென ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ. ந.ரங்கநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார். (எ-41-66)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25

சக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்கு இடம்பெறவுள்ளது. சக்கோட்டை சங்க எல்லைக்குட்பட்ட பழைய வேதக்கோவிலடி, சுடலையடி, ஆறுகால்மட அங்கத்தவர்கள் உள்ளிட்ட சகல அங்கத்தவர்களையும்தவறாது கலந்துகொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-41-100)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.25

தெல்லிப்பழை வீணாக்கடவை காசி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் நடைபெறும். எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு பக்தமுத்தி பாவனோற்சவமும், 7ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு வசந்தோற்சவமும், 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தைலாப்பியங்கோற்சவமும் இடம்பெறும்.

9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேக உற்சவமும், அன்றைய தினம் நண்பகல் வேட்டைத் திருவிழாவும், இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-66)

## சுற்றுலா வழிகாட்டி பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.25

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்துடன் இணைந்து, பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டி பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இதில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் தென்மராட்சி வலயக்கல்வி அபிவிருத்திப் பிரிவில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும். இலவசமாக நடத்தப்படும் இந்தப் பயிற்சி மூன்று மாதங்கள் நடைபெறும். பயிற்சிநெறியின் பின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-159)

## சிறுகதை பனுவல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.25

புயல்நேசனின் நஞ்சுமாலைச் சிறுகதை பனுவல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதி இல.286, திருமறைக் கலாமன்ற கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

ஆங்கில மொழிபெயர்ப்பாளரும் எழுத்தாளருமான இ.கோகுலராகவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் த.காண்டீபன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதம கணக்காளர் சு.அகிலன், கௌரவ விருந்தினராக யாழ் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையின் அதிபர் க.ஞானராசா ஆகியோர் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



## கச்சதீவில் பணியாற்றிய ஊழியர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

கச்சதீவுப் புனித அந்தோனியார் திருவிழாவின் போது, அர்ப்பணிப்புடன் பணியாற்றிய, நெடுந்தீவுப் பிரதேசசபையின் ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாம்பசிவம் சுதர்சன், நெடுந்தீவுப் பிரதேசசபையின் தவிசாளர் ச.சத்தியவரதன், வடக்கு மாகாண ஆளுநர் செயலக அதிகாரிகள் மற்றும் பிரதேசசபையின் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

கச்சதீவுப் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாக் காலத்தில் பணியாற்றிய, நெடுந்தீவுப் பிரதேசசபையைச் சேர்ந்த 14 ஊழியர்களுக்கு, ஆளுநரால் மெச்சுரைகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. ஊழியர்களுடன் இணைந்து களத்தில் நேரடியாகப் பணியாற்றி, வழிகாட்டிய நெடுந்தீவுப் பிரதேசசபையின் உப தவிசாளரும் கௌரவிக்கப்பட்டார். (க-66)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.25

உரும்பிராய் பரத்தைப்புலம் கருணை மிகு ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் மஹா கும்பாபிஷேகம் கடந்த 8ஆம் திகதி ஆரம்பமாகியது. நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 7மணிக்கு யாகாரம்பமும், 28ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை காலை 6மணி முதல் மாலை 4மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதலும், 29ஆம் திகதி புதன்கிழமை காலை 9.05மணி முதல் 10.42மணி வரை மஹா கும்பாபிஷேகமும் இடம்பெறும். அன்று மதியம் 1மணிக்கு அன்னதானமும், மாலை 5மணிக்கு பூசை, வசந்தமண்டபப் பூசை, பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல், திருவீதியுலாஎன்பனநடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 25

வடமாகாண வங்கி ஓய்வுநிலை உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். வண்ணியசிங்கம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் அருளானந்தன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. நிகழ்வின் இறுதியாக மதியபோசன விருந்துபசாரத்துடன் கூடிய ஒன்றுகூடல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்த அறிவித்தலை உத்தியோகபூர்வ அழைப்பாக ஏற்று அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-இ)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கவும். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கன்னி:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துதருவீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். நண்பர்களால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**கும்பம்:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது**

**பொருள்:** உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தை விட மிகப் பெரிதாகும்.

# பலவீனப்படும் தேசியம்!

ஈழத்தமிழர்களிடம் கட்சிகள் அதிகரித்துவிட்டன. அவற்றை ஓர் ஒழுங்குமுறைக்குள் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று தமிழரசுக்கட்சியினரிடம் தெரிவித்திருக்கின்றார் இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் இராதாகிருஷ்ணன். ஈழத்தமிழர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வடக்கு= கிழக்கில் செயற்படும் அரசியற்கட்சிகளின் எண்ணிக்கை மிக அதிகம்தான். எனவே, இந்தியக் குடியரசுத் துணைத்தலைவரின் கருத்தில், அவர் கூறவிழையும் விடயத்தில் ஏராளமான அர்த்தங்கள் பொதிந்திருக்கின்றன. அவற்றை ஓர் இனக்குழுமமாக நாங்கள் உய்த்துணர்வதும், ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியதும் அவசியமே. அதில் இன்னொரு கருத்துக்கு இடமில்லை.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், பொதுவான அரசியல் இலக்கு என்பது ஈழத்தமிழர்களுக்கு எட்டாக்கனியாக அமைந்துவிட்டது. கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளில் திக்கொன்றும் திசையொன்றுமாகக் கட்சிகள் செயற்பட ஆரம்பித்துள்ளன. போதாததற்கு அதிகாரப்போட்டிகளில் மோகம் கொண்டவர்களாகவும் அரசியற்தலைவர்கள் செயற்பட விளைகின்றனர். இதனால் ஏற்பட்ட விளைவுகள் காரணமாக இன்று வடக்கிலும் , கிழக்கிலும் நூற்றுக்கணக்கான கட்சிகள் தோன்றியிருக்கின்றன. கட்சிகள் தோன்றுவது ஜனநாயகப் பரப்பில் இயல்பானதுதான். ஆனால், ஈழத்தமிழர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் தமிழர் தாயகத்தில் தற்போதுள்ள கட்சிகளின் எண்ணிக்கை அதிகம். நேர்மையாகக் கூறவேண்டுமெனில் இதுவொரு சாபக்கேடான போக்கு.

இனப்படுகொலையை எதிர்கொண்டு நீதியையும், விடுதலையையும் தேடுகின்ற இனம் என்ற ரீதியில் ஒரே குடையின்கீழ் ஒன்றுபடவேண்டிய அவசியம் ஈழத்தமிழர்களுக்கு உள்ளது. ஆனால், அளவுக்கு அதிகமான கட்சிகளும், ஏட்டிக்குப் போட்டியாக அமைக்கப்படும் கூட்டணிகளும் எம்மைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக பலவீனப்படுத்துகின்றன என்பதே நிதர்சனம். ஓரணியில் பலமாகவும், வீரியமாகவும், ஒரே தொனியிலும் முன்வைக்கப்பட வேண்டிய எம் குரல்கள் இப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக சம்பிரதாயத்துக்கே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய செயற்பாட்டாலும், நிலைப்பாட்டாலும் ஒருபோதும் நீதியைக் கண்டடைய முடியாது. அதற்கு கட்சிகள் அனைத்தும் முறையான வகையில் ஒழுங்குபடுத்தப்படுதல் அவசியம். இதற்காக அவ்வப்போது சில முன்னெடுப்புகள் 'விடிவெள்ளியாக' மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அத்தகைய நடவடிக்கைகள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதென்பது இடியப்பச் சிக்கலே. இப்போதும்கூட தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால் மேற்கொள்ளப்படும் நகர்வுகளை இதற்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ள முடியும்.

அதேநேரம், இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் இராதாகிருஷ்ணன் தமிழரசுக் கட்சியினரிடம் சுட்டிக்காட்டியதற்கு அமைய, 'எதற்காக புதிய கட்சிகள் தோற்றம் பெறுகின்றன?' என்ற பரிசீலனையில் பாரம்பரியக் கட்சிகளின் தலைவர்களும் அதிகாரப் பீடங்களும் ஈடுபட வேண்டியது அவசியம். சில பாரம்பரியக் கட்சிகளுக்குள் அதிகரித்துள்ள 'நரித்தனங்களும்', குத்துவெட்டுகளும், பிடுங்குப்பாடுகளும், தனிநபர் மேலாதிக்க மனோநிலையும்கூட கட்சிகள் பல கூறுகளாக உடையக் காரணமாக அமைகின்றன. இந்தச் சாபக்கேடான போக்கிற்கு விரைந்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம். இந்த விடயத்தை தமிழரசுக் கட்சியினரிடமே நேரடியாக இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் சுட்டிக்காட்டியமை மேலும் சிறப்பு.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





# மார்ச் ஏற்றுமதி வருவாய் 1,467 மில்லியன் டொலர்!

கொழும்பு, ஏப்.25

**மத்திய கிழக்கில் போர்ச்சூழல் நிலவியபோதிலும், கடந்த மார்ச் மாதத்தில் 1,467 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.**

ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளதாவது-

கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், மார்ச் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் 9 வீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. இருப்பினும், மத்திய கிழக்குப் போர் காரணமாக கடந்த ஆண்டின் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் வருமானம் 5.2 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

தேங்காய் சார்ந்த பொருள்கள், மின்னணுவியல், உணவு மற்றும் பானங்கள், மாணிக்கக்கல், ஆபரணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. ஐரோப்பிய, ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளுக்கான ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஏற்றுமதி வருமானம் போர்ச்சூழல் காரணமாக 48 வீதத்தால் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

2026ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இலங்கை மொத்தம் 4,308 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2 வீத வளர்ச்சியாகும்- என்றார். (ச-இ)



## எயார்லைன்ஸ் பெயரில் நிதிமோசடி

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தி அண்மைகாலமாக வட்ஸ் அப் செயலி ஊடாகத் தொடர்புக் கொண்டு முன்னெடுக்கப் பட்டு வரும் நிதி மோசடி குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ சேவை எனத் தெரிவித்து வட்ஸ் அப் செயலி ஊடாக பொதுமக்களைத் தொடர்புகொள்ளும் மோசடியாளர்கள், மூன்று போலியான இணையத்தள முகவரிகளைப் பயன்படுத்தி நிதிமோசடியில் ஈடுபட்டு வருகின்றமை தெரிய வந்துள்ளது. உடனடி நிதி இலாபங்களை எதிர்பார்க்கும் பொதுமக்கள் இவ்வாறான மோசடிகளில் அடிக்கடி சிக்கிக்கொள்கின்றனர். இவ்வாறான நபர்களிடம் அல்லது குழுக்களிடம் ஏமாற வேண்டாம் என பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

## பணத்தகராறில் ஒருவர் கொலை

கொழும்பு, ஏப்.25

குருநாகல் - முத்தெட்டுகல பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வெல்லவ பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவருக்கும் அவரது அயல் வீட்டாருக்கும் இடையில் நிலவிய பணத்தகராறு முற்றியதே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பாக 49 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## ரயில் தடம்புரள்வு

கொழும்பு, ஏப்.25

பெலியத்தையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயில் நேற்றுக் காலை தடம்புரண்டுள்ளது. இதனால் கரையோர ரயில் மார்க்கத்தில் ரயில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ச-இ)

## பசுமை அமைதி பரிசளிப்பு விழா

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நடத்தும் பசுமை அமைதி விருதுகள் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு, யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பியும், சிறப்பு விருந்தினர்களாக கிழக்கு மாகாணக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் மு.அ.முகமது சுல்பீக்கர் அபூபக்கர், இயற்கைவழிச் செயற்பாட்டாளர் சி.சுந்தரேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-66)

**நாளை** ஞாயிற்றுக்கிழமை- சித்திரை 13


26.04.2026

சுபநேரம் : 08.59 – 10.29

ராகுகாலம் : 04.29 – 05.59


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# ஆசிரியர்கள் பற்றாக்குறையுடன் விசுவமடு பாரதி வித்தியாலயம்!

**முல்லைத்தீவு, ஏப்.25**

**முல்லைத்தீவு விசுவமடு பகுதியில் அமைந்துள்ள வள்ளுவர்புரம் பாரதி மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 620 மாணவர்களின், பிரதான பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளைக் கொண்டு நடத்த அங்கீகரிக்கப்பட்ட 55 ஆளணியில், தற்போது 39 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். குறிப்பாக உயர்தரப் பிரிவில் நிலவும் வெற்றிடங்கள் மாணவர்களின் பெறுபேறுகளைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன. கணிதப் பிரிவுக்கு மூன்று ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒருவர் மட்டுமே உள்ளார். விஞ்ஞானப் பிரிவுக்கு மூன்று ஆசிரியர்களுக்குப் பதிலாக ஒருவர் மட்டுமே கடமையாற்றுகிறார். ஏனைய பாடங்களுக்கு சித்திரம், புவியியல், கிறிஸ்தவ நாகரீகம் மற்றும் பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்களே இல்லை. அதேவேளை பாடசாலையின் உட்கட்டமைப்பும் பெரும் அச்சுறுத்தலாக காணப்படுகின்றது.. 13.5 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இந்தப் பாடசாலைக்குச் சுற்றுவேலி இல்லை. அத்துடன், வளாகத்தில் உள்ள பாழடைந்த பழைய கட்டடங்கள் மற்றும் பாதுகாப்பற்ற கிணறுகள் மாணவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் காணப்படுகின்றன என்று பாடசாலைச் சமூகத்தின் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாடசாலைக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். (ச-246)


## அறை வாடகைக்குண்டு

கோப்பாய் சந்திக்கருகில் 2 பேர் தங்கக் கூடிய சகல வசதியுடன் கூடிய அறை உள்ளது. வேலைக்கு செல்பவர்கள் அல்லது பல்கலைக்கழக மாணவர்களுக்கு உகந்ததாக இருக்கும் வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

(cs 61301) (N.1)

T.P.: 076 352 0616



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

### கேள்வி விண்ணப்ப அழைப்பு –

### வாடகை வாகன சேவை வழங்கல் (2026)
### Bid Notice – Provision of Hiring Vehicle Services (2026)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகத்தின் கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக வாகனங்களை அழைப்பின் பேரில் அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**தேவையான வாகன வகை:**
- பயணிகள் வான் (10–14 ஆசனங்கள்) – 03 வாகனங்கள்
- பயன்பாடு: யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி வளாகங்கள்

**தகுதி, நிபந்தனைகள்:**
- பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது இலங்கைப் பிரஜை
- விண்ணப்பதாரரின் பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனம் அல்லது சத்தியக்கடதாசி மூலம் உரிமையினை உறுதிப்படுத்துதல்
- குறைந்தது 3 வருட அனுபவம் வாடகை (Hiring) வாகன சேவையில்
- குறைந்தது 5 வருட அனுபவமுள்ள, உடல்-உள ஆரோக்கியமான சாரதிகள்
- வாகன முதல் பதிவு 2012க்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்

**ஒப்பந்த காலம்:**
- 1 வருடம் (செயற்றிறன் மதிப்பீடு – 60 நாட்கள்)

**நிதி நிபந்தனைகள்:**
- விண்ணப்பச் செயலாக்க கட்டணம் (Application Processing Fee): ரூ. 3,000 (மக்கள் வங்கி – கணக்கு எண்: 97000060000276, "நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் வைப்பிலிட வேண்டும்
- பாதுகாப்பு வைப்பு (Bid Security): ரூ. 15,000 மக்கள் வங்கி – கணக்கு எண்: 97000060000268, "நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் வணிக வங்கியிலிருந்து, 120 நாட்கள் செல்லுபடியாகவேண்டும் (முடிவுத் திகதி 19.09.2026)

**விண்ணப்பச் சமர்ப்பிப்பு:**
- யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி வளாகங்களுக்கான விண்ணப்பங்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்
- பாதுகாப்பு வைப்பு மற்றும் விண்ணப்பக் கட்டணச் சான்று தனித்தனியே இணைக்கப்பட வேண்டும்
- பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
- விண்ணப்பங்கள் மூலப்பிரதி, இணைப்பிரதி என தனித்தனியாக பொதியிட்டு, இடது மேல் மூலையில்: "அழைப்பின் பேரில் / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் —2026" எனக் குறிப்பிடப்பட வேண்டும்

**முகவரி:** தவிசாளர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இ-57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**முடிவுத் திகதி: 15.05.2026 பிற்பகல் 2.30 மணிக்குள்** (பதிவுத்தபால் அல்லது நேரடியாக)

**முக்கிய திகதிகள்:**
- முன் ஏலக் கூட்டம் (Pre bid meeting): **29.04.2026, பிற்பகல் 2.30,** பிரதான சபா மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- கேள்விமனு திறப்பு: **15.05.2026, பிற்பகல் 2.30,** பிரதான சபா மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதி முன் ஏலக் கூட்டம் மற்றும் கேள்விமனுத் திறப்பில் பங்கேற்கலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக இணையதளத்தில் : info@univ.jfn.ac.lk பார்வையிடலாம் அல்லது அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (பொதுநிர்வாகம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களை தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி: 021-2226517

தலைவர், பெறுகைக்குழு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
25.04.2026
Fax No: 021 222 6517.Email:administration@univ.jfn.ac.lk
University of Jaffna P.O. Box 57, Thirunelvely, Jaffna




# மாணவர்களுக்கு மதிப்பளிப்பு

**கிளிநொச்சி,ஏப்.25**

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய நிர்வாகத்தினரால், க.பொ.த. உயர்தரப் பரிட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமான நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் மற்றும் கல்வி அதிகாரிகள் கலந்துகொண்டனர். (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
07 • 07 • 1967



விண்ணில்
29 • 04 • 2023

## அருளானந்தம் ஆனந்தகுமார்

சகோதரா, உன்னை வார்த்தைகளால் விவரிக்க
முடியாத அளவுக்கு இழந்து தவிக்கிறேன். உன்
சிரிப்பும், வழிகாட்டுதலும், அக்கறையும் என்
வாழ்க்கையை செதுக்கின. நீ அமைதியாக
இளைப்பாறு. உன் ஆன்மா ஒவ்வொரு சவாலிலும்
எனக்கு தொடர்ந்து வழிகாட்டுகிறது. நாம் ஒன்றாக
மேற்கொண்ட சாகசங்கள் மற்றும்
உரையாடல்களின் நினைவுகள் என்னை
மகிழ்ச்சியாக இருந்தாலும் துக்கத்தாலும்
நிரப்புகின்றன. ஒருநாள் சொர்க்கத்தில் நாம்
மீண்டும் தழுவிக்கொள்வோம் என்ற நம்பிக்கையை
நான் பற்றிக்கொண்டிருக்கிறேன். என்றென்றும் என்
சகோதரன். என் நண்பன். என் இதயம்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
077 358 3895

(cs.31647) (N-1)

# காணி விற்பனைக்கு

வடக்கு மாகாண சபைக்கு முன்னால்
A9 வீதியிலிருந்து 200m தூரத்தில் புதிய வீடுடன்
(1 பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
விலை - ஒரு கோடியே இருபது இலட்சம்.

தொடர்பு: 077 983 1044 / 077 069 0896

(CS 61297) N-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
18 • 12 • 1955



மறைவு
10 • 04 • 2026

கடந்த 10.04.2026 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் சுப்பிரமணியம் மகேஸ்வரன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் **"இல.1001 கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள திவ்ய மகால்"** மண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.99, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
075 038 6066
075 584 1979


(cs61303) (N-1)

# வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.25 அரியாலை புனித யூதா தேயு யாத்திரைத் தல வருடாந்தத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையும், திருப்பலியும், நற்கருணைப் பெருவிழாவும் இடம்பெறும். நாளை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், புனித யூதாத தேயுவின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (க)

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 • 10 • 1946



மறைவு
22 • 04 • 2026

## தர்மலிங்கம் இராசரத்தினம் (சின்ராசா)

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஞான வைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை எனும் முகவரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இராசரத்தினம் (சின்ராசா) அவர்கள் கடந்த 22.04.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் சின்னதங்கம் தம்பதியரின் மூத்த புதல்வரும், சரஸ்வதி (சோதிப்பிள்ளை) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம், சின்னையா (ஓய்வுபெற்ற உதவி கல்வி பணிப்பாளர்), இராசம்மா, நவரத்தினம், நாகராசா (சுவிட்சர்லாந்து), காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகிலாண்டேஸ்வரி (உதவி அதிபர் - வவுனியா விபுலானந்தக் கல்லூரி), அம்பிகாதேவி (லண்டன்), அருமைநாயகி (சமுர்த்தி உத்தியோகத்தர் - அளவெட்டி வங்கி), சூரியகுமார் (ஜேர்மனி), இரஞ்சித்குமார் (லண்டன்), அனுசியா, தர்ஷினி (லண்டன்), தர்ஷனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குபேந்திரநாதன் (கனடா), செல்வச்சந்திரன் (லண்டன்), அற்புதநாதன் (Jaffna Electrical Manager), யசோதா (ஜேர்மனி), கயேந்தினி (லண்டன்), சுதாகரன், நிமலன் (லண்டன்), சதீஸ்குமார் (பொது சுகாதார பரிசோதர் MC / Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜின், அஜன், அக்சயா (லண்டன்), தஷணிகா, அபிசாந், ஆதீஸ், ஜெய்சன், ஜெனிக் (ஜேர்மனி), அபிஷ், அஷ்னா (லண்டன்), அபிரசாந், அஸ்விகாந், ருக்ஷனன், வைஷ்ணவி, கீர்த்தன்யா ஆகியோரின் பேரன்புமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று, அஞ்சலிக்காக அவரது பிறப்பிடமான பலாலியில் வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக பலாலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 0094 76 437 6893
0044 7400 000628
0094 77 181 1284

தகவல்:
குடும்பத்தினர்

(cs61305) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 • 08 • 1932



மறைவு
24 • 04 • 2026

## இரத்தினசிங்கம் தவமணி (மச்சாள்)

கரவெட்டி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் தவமணி (மச்சாள்) நேற்று (24.04.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரதாஸ் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் மனைவியும், தவரஞ்சனி, தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாக்கியநாதன், சித்திரா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், கோமதன், கிரிஷகான், தனுகா (ஜேர்மனி), கவிதா (ஜேர்மனி), லக்ஷிகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாமகள் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
மகள் - தவரஞ்சனி
077 040 9136

(CS61307) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25 சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச்சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, பாடசாலை நூலகத்தில் நடைபெறும். கூட்டத்தில் கடந்த ஆண்டுக்கான செயற்பாட்டறிக்கை, கணக்கறிக்கை வாசிக்கப்பட்டு, நிர்வாகத் தெரிவு இடம்பெறும்.

(சு)

## மரண அறிவித்தல்

பிறப்பு 25.06.1962  இறப்பு 24.04.2026

### நவரட்ணம் சாந்தகுமார் (தம்பி மாமா)

யாழ்ப்பாணம் நவாலியை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் சாந்தகுமார் அவர்கள் நேற்று (24.04.2026) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் - விஜயதேவி தம்பதியரின் அன்பு மகனும், ராசையா - மாசிலாமணி தம்பதியரின் மருமகனும், ரேணுகாவின் அன்புக் கணவரும், லெஸ்லி லவன், அஜித் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தினி, சாந்தகோண் (ராசா), சாந்தரூபி (தங்கா), சாந்தவதனி (ரதி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மா, சாரதா (பிரான்ஸ்), ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து செஜோன்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/1,
விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்
077 3360 272 (அஜித்)

(CS 31669) A

## மரண அறிவித்தல்

பிறப்பு 11.06.1942  இறப்பு 24.04.2026

### திருமதி லில்லி தங்கரத்தினம் சிங்கராஜா (கிளி)

கோவில் வீதி ஒழுங்கை சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி லில்லி தங்கரத்தினம் சிங்கராஜா நேற்று (24.04.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சூசைப்பிள்ளை மற்றும் சூசைப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.சிங்கராஜா அவர்களின் மனைவியும், திரு.சிங்கராஜா றொமேஷ் (உப அதிபர்-யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) அவர்களின் தாயாரும், திருமதி ஆன்மொனிக்கா றொமேஸ் (ஆசிரியை- யா/சென் சாள்ஸ் மகாவித்தியாலயம்) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான விக்ரர் ஞானம்மா, மேரி லில்லி மரியநாயகம் மற்றும் பிரான்சிஸ் சேவியர், காலஞ்சென்ற புஷ்பம் நவரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரியும், ஜலின் மற்றும் ஜெனோஷன் அவர்களின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (25.04.2026) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 400 5953
077 271 9982

இல.4, கோவில் வீதி ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(மகன்)

(CS 31670)A

## மரண அறிவித்தல்



தோற்றம்
01.04.1944

மறைவு
22.04.2026

### திருமதி கணேசவேல் இரத்தினதேவி

விடத்தல் தீவு, அடம்பன், மன்னாரை பிறப்பிடமாகவும் ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசவேல் இரத்தினதேவி கடந்த 22.04.2026 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் - அன்னபூரணத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அபிமன்யு (சட்டத்தரணி), சாருமதி (லண்டன்), அபிராமி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைமதி (சட்டத்தரணி), இராஜகுமார் (லண்டன்), சதீசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபராஜிதன், நிருஜன், சாகித்தியா, லக்ஷனா, சஜிதன், ஐஷிகன், கவின் ஆகியோரின் பேர்த்தியும், பரமேஸ்வரி (மன்னார்), காலஞ்சென்ற சிவலிங்கம் (லண்டன்), தியாகலிங்கம் (கனடா), சதானந்தரூபி (லண்டன்), பத்மினி (வைத்தியர் - லண்டன்), சாந்தகுமார் (சுவிஸ்), திருக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகலிங்கம் (மன்னார்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி (லண்டன்), சிவச்செல்வி (கனடா), சிவசோதிராசா (லண்டன்), செல்வராசா (வைத்தியர் - லண்டன்), சுனந்தா (சுவிஸ்), சாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
மகன் - 077 795 3277
மகள் - +447427513793
மகள் - +1(647)205-8219

CS 31668) A


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (எ-41,17)



படங்கள்ஐ.சிவசாந்தன்



குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய பராபவ வருட மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் நடைபெறவுள்ளது. (எ-41-66)

இணுவில் மேற்கு செகராசசேகரப் பிள்ளையார் ஆலய பராபவ வருட மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 11 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் இடம்பெறவுள்ளது. (எ-41-66)



# சிறார்களுக்கு விழிப்புணர்வு

சாவகச்சேரி, ஏப்.25

சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையில் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம், வரவு ஆகியவை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-9)




# மரண அறிவித்தல்

ஜனனம் 12 . 06 . 1950

சிவபதம் 22 . 04 . 2026



## பொன்னையா பரமேஸ்வரி

மாசார், பளையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கையும், கொக்குவில் கிழக்கையும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரமேஸ்வரி அவர்கள் கடந்த (22.04.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், சசிகலா (லண்டன்), மேகலா, சதீஸ் (பொன்னையா அன் சன் மருந்துக்கடை, கற்பக பிள்ளையார் கோயிலடி - உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மல்லிகாதேவி, பரமதேவன் (பிரான்ஸ்), மாலினிதேவி (சுவிஸ்), சண்முகதேவன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், சிவபாலன் (லண்டன்), ஜஸ்வரியா, பரமேஸ்வரன் (அப்பையா), கிருபராணி (பிரான்ஸ்), தியாகராசா (சுவிஸ்), ஜெயதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிருதிகா (லண்டன்), திகானுகா (லண்டன்), சுபானுகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவராசா, லீலாவதி மற்றும் விமலா (மாசார்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-04-2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் கொக்குவில் கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

101, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மகன் - 075 498 5899


(CS/3165) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளிரும் சூரியனின் ஓராண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.25
பனைவள மேம்பாட்டுப் பத்திரிகையான ஒளிரும் சூரியனின் ஓராண்டு விழா, யாழ்.பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் ஆர். ரவீந்திரன், இயக்குநர் சபை உறுப்பினர் ந. கமலாகரன், பொதுசன நூலக உதவி நூலகர் அனிதா தயாளன் ஆகியோர் கலந்துகொண்டனர். பத்திரிகையின் ஓராண்டிதழின் முதற்பிரதியை பிரதம ஆசிரியர் ந. பார்த்திபன் வெளியிட்டு வைக்க, பிரதம விருந்தினர் பெற்றுக்கொண்டார். இந்தப் பத்திரிகை பிளெட்ஜ் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தால் மாதம் ஒரு தடவை வெளியிடப்படுகின்றது. (கு)



# தேரடிச் சித்தரின் மாதாந்தக் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்.25
நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு, கடந்த சனிக்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெற்றது.
சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் உப அதிபரும், சைவப்புலவருமான க. கைலைநாதன் சித்தர் பெருமை எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். (க-66)



# யாழ்.மாவட்டத்துக்கு புதிய கணக்காளர்

யாழ்ப்பாணம், ஏப்.25
யாழ்.மாவட்டச் செயலகத்தின் புதிய கணக்காளராக வல்லவராஜன் ரதீஸ் கடந்த திங்கட்கிழமை, மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
இவர் இதற்கு முன்னர் யாழ்ப்பாணம் தபால் திணைக்களப் பிராந்தியக் கணக்கு அலுவலக கணக்காளராகக் கடமையாற்றியிருந்தார். (க-66)



# இலங்கைக் கலாசார விழுமியங்களுடன் லண்டனில் புத்தாண்டுக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25
இலங்கையின் கலாசார விழுமியங்களைப் பறைசாற்றும் புத்தாண்டுக் கொண்டாட்டம், லண்டனில் கல்வி பயிலும் இலங்கை செவனிங் மாணவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்டது. நிகழ்வில் பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர், தூதரக அதிகாரிகள், லண்டனின் முன்னணி பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட செவனிங் மாணவர்கள் கலந்துகொண்டனர்.
நிகழ்வில் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் கலாசார முக்கியத்துவம் குறித்து உரைகள் நிகழ்த்தப்பட்டன. இலங்கையின் புத்தாண்டு மரபுகளை விளக்கும் வகையில் குறும்படமும் திரையிடப்பட்டது. விருந்தினர்களுக்கு இலங்கையின் பாரம்பரிய உணவுகளான பால்சோறு உள்ளிட்ட சுவைமிகு உணவுகள் பரிமாறப்பட்டன. தொடர்ந்து கயிறு இழுத்தல், சாக்கு ஓட்டம், இசை நாற்காலி, யானைக்கு கண் வைத்தல் மற்றும் பலூன் உடைத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளும் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு இலங்கையின் உயர்தரத் தேயிலை பரிசாக வழங்கப்பட்டது. (க-214,113)



அக்ஷய திருதியை முன்னிட்டு, யாழ். நகரில் உள்ள தங்க நகைக்கடைகளில் அதிகளவான மக்கள் கடந்த இரண்டு நாள்களும் சுபநேரங்களில் தங்க நகைகளைக் கொள்வனவு செய்ததைக் காண முடிந்தது. தங்கத்தின் விலை ஒரு பவுணுக்கு 4 இலட்சத்தைக் கடந்துள்ளபோதும், மக்கள் அக்ஷய தினத்தில் நகைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் சுபநேரத்தில் கொள்வனவு செய்ததைக் காணமுடிந்தது. (க-17)

# புதிய நூல்களின் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.25
சாவகச்சேரி பிரதேசசபையின் கைதடி பொது நூலகத்தின், புதிய நூல்களின் காட்சிப்படுத்தல் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெறவுள்ளது. உலக புத்தக தினம் மற்றும் பதிப்புரிமை தினத்தை முன்னிட்டு, நூலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற புதிய நூல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. வாசகர்கள் இவற்றைப் பார்வையிட்டு பயன்பெறுமாறு கைதடி பொது நூலகத்தின் நூலகர் கேட்டுள்ளார். (க-199)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா

## பூந்தோட்டம் பகுதியில் அதிகரிக்கும் திருட்டுகள்

### நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 25

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் அண்மைக்காலமாகத் திருட்டுகள் அதிகரித்துவரும் நிலையில், அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அண்மைய நாள்களாத் தொடர்ச்சியாகத் திருட்டுகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த சில வாரங்களுக்குள் மட்டும் அண்ணளவாக மூன்றுக்கும் மேற்பட்ட வீடுகளில் இவ்வாறான திருட்டுகள் பதிவாகியுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் மிக விரைவாக சந்தேக நபர்களைக் கைதுசெய்து நாம் எவ்வித் தொந்தரவும் இன்றி நிம்மதியாக வாழ்வதற்கு வழியேற்படுத்தவேண்டும் - என்றனர். (அ-ம-110)

### மக்களுக்கு...

லேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரையை மையப்படுத்தி ஏற்பட்டுள்ள காணிப் பிணக்குகளுக்குத் தீர்வுகாணும் வகையில், மாவட்டச் செயலரால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு அமைய எதிர்வரும் 28ஆம் திகதி காலை 8 மணிக்கு அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படும். புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைய, காணிகளைப் பௌதீக ரீதியாக இனங்காண்பது பொருத்தமானது என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, அன்றையதினம் தங்களுக்கு உரித்தான காணித் துண்டுகளை அடையாளப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் - என்றுள்ளது.

எனினும், புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் எத்தகைய கலந்துரையாடல் இடம்பெற்றது என்றும், என்னென்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டன எனவும் அந்தக் கடிதத்தில் தெளிவாக இல்லை. அத்துடன் இவ்வாறான கலந்துரையாடல் இடம்பெறுகின்றமை தொடர்பில் காணிகளின் உரிமையாளர்களுக்கு முறையான அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை. ஆதலால், இந்தக் காணி அளவீட்டு நடவடிக்கை திஸ்ஸ விகாரைக்காக காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நடவடிக்கையா என காணிகளின் உரிமையாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் குறித்த காணிகளை அளவீடு செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில், திஸ்ஸ விகாராதிபதியின் எதிர்ப்பால் அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### நாட்டில்...

என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வளிமண்டலவியல் மாற்றங்கள் காரணமாக அடுத்த ஓரிரு தினங்களுக்கு இடியுடன் மழை பெய்வதற்குக் கூடுதலான சாத்தியங்கள் உள்ளன. மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் மேற்பட்ட மழைப்பொழிவுக்கு சாத்தியம் உள்ளது - என்றுள்ளது. (அ-ம)

### இராணுவ...

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

1990ஆம் ஆண்டு யுத்தத்தால் நாங்கள் இடம்பெயர்ந்து சென்ற வேளையில் எமது காணிகள் அனைத்தும் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டன. போர் நிறைவுக்கு வந்து 17 வருடங்களாகின்ற நிலையில் எமது காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் நாங்கள் ஜனாதிபதி, பிரதமர், ஆளுநர், மாவட்டச்செயலர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் மனுக்களை வழங்கியுள்ளோம். எனினும், தற்போதுவரை காத்திரமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மக்களின் காணிகள் அனைத்தும் மக்களுக்கே வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்திருந்தார். எனினும், தற்போதுவரை எமது காணிகளை விடுவிக்காதமை ஏமாற்றமளிக்கின்றது. திசைகாட்டி அரசாங்கத்திலாவது எமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் - என்றனர். (அ-ம-26-66)

### உணவகத்துக்கு...

நெல்லியடிப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு நீதிமன்றத்தால் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இதேவேளை சுகாதார விதிமீறல்களுடன் இயங்கிய மேலும் ஒரு பலசரக்குக் கடைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், குறித்த கடையின் உரிமையாளர் மன்றில் சமுகமளிக்காத காரணத்தால் வழக்கு ஜூன் மாதம் 4ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. (அ-ம-100)

### மீண்டும்...

தீப்பரவல் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதும், அந்தப் பகுதிக்கு விரைந்த யாழ்ப்பாண மாநகரசபைத் தீயணைப்பு வாகனங்கள் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன. எனினும் நேற்று இரவுவரை அந்தப் பகுதியூடாகப் பயணிக்க முடியாத அளவுக்கு கரும்புகையும் துர்நாற்றமும் சூழ்ந்திருந்தது. காக்கைதீவில் கடந்த சில வருடங்களாக அவ்வப்போது தீப்பரவல்கள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-555)

### புற்றுநோய்...

செய்யும் வகையிலும், அவதூறுகளைப் பரப்பும் நோக்கிலும் செய்திகளையும், பரப்புரைகளையும்மேற்கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, மருத்துவர் ஜெயக்குமார் உட்பட இன்னும் சிலருக்கு எதிராக தெல்லிப்பழைப் புற்றுநோய் பிரிவு மருத்துவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் சார்பில் சட்டத்தரணி கௌசல்யா முன்னிலையானார். இந்த வழக்குத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு இதுவரை அழைப்புக் கட்டளைகள் அனுப்பப்படவில்லை என்ற விடயத்தை நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டிய அவர், காரணம் காட்டல்களுக்காக நீதிமன்றத்தில் தவணை கோரினார். இதன்படி வழக்கு மே 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தரப்பில் காரணம் காட்டல்கள் இடம்பெற வேண்டும் என்று நீதிமன்றம் அறிவுறுத்தியது. அத்துடன் இன்னொரு எதிர்த்தரப்பான மருத்துவர் ஜெயக்குமாரின் காரணம் காட்டல்கள் மீதான கட்டளை அன்றையதினம் வழங்கப்படவுள்ளது.

வழக்குத் தொடுநரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி லக்சான் டயஸின் வழிகாட்டலில், சட்டத்தரணி கனகலிங்கம் கிஷோபனா முன்னிலையானார் என்பது குறிப் பிடத்தக்கது. (அ-ம-26)

### தமிழகப்...

குடியுரிமையும், வாக்களிக்கும் உரிமையும் வழங்கப்படவில்லை. எனினும், சில நீதிமன்றங்களில் சட்டப்போராட்டம் நடத்தி குடியுரிமையும் வாக்களிக்கும் உரிமையும் பெற்றுள்ளனர். இவ்வாறாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்ற 10 பேரே நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் வாக்களித்துள்ளனர். (அ-ம-35)

### காணிப்...

மக்களை நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் நிலவும் காணிப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. எனவே, மயிலிட்டி விவகாரம் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்படும். காணி விடுவிப்பில் எமது அரசாங்கம் மிக வெளிப்படையாகச் செயற்பட்டு வருகின்றது. எனவே உரிய ஆவணங்கள் சகிதம் இந்தப் பிரச்சினை விரைவாகத் தீர்த்து வைக்கப்படும்.

எமது ஆட்சி மக்களுக்கானது, எனவே, மக்களின் சொத்துகளை பலவந்தமாக வைத்துக்கொள்வதற்குரிய எண்ணம் எமக்கு இல்லை. தேசிய பாதுகாப்புக்கு அத்தியாவசியம் அற்றது எனக் கருதப்படும் இடங்களை உடனடியாக விடுவிப்போம் - என்றார். (அ-ம-26-66)

### நெடுந்தீவுக்கு...

நெடுந்தீவு - மாவிலித் துறைமுகத்தில் இருந்து நேற்றுக் காலை 9.45 மணியளவில் ஆரம்பித்த போராட்டம் பின்னர் பேரணியாக பிரதான வீதியூடாக நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, ஜனாதிபதி, பிரதமர், வடமாகாண ஆளுநர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், கல்வி அமைச்சர், சுகாதார அமைச்சர், போக்குவரத்து அமைச்சர் ஆகியோருக்கு வழங்குவதற்காக நெடுந்தீவு பிரதேச செயலாளரிடம் மனு வழங்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவில் மருத்துவம், போக்குவரத்து, கல்வி மற்றும் சுகாதாரம் என அனைத்துத் துறைகளும் மிக நீண்டகாலமாக பெரும் குறைபாடுகளுடன்தான் இயங்கி வருகின்றன. எனினும், இதுவரை பிரச்சினைகள் எவையும் நிவர்த்தி செய்யப்படவில்லை. மாறிமாறி ஆட்சிக்குவரும் அரசாங்கங்கள் வெறும் வாக்குறுதிகளை மட்டுமே வழங்குகின்றன. எனினும், செயற்பாட்டு ரீதியாக எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே, தற்போதைய அரசாங்கமாவது எமது பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றனர்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், மத குருமார்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில், நெடுந்தீவு தனியார்படகு உரிமையாளர்கள் சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம், மற்றும் சுற்றுலா வாகன உரிமையாளர்கள் சங்கத்தினர் மற்றும் நெடுந்தீவு வர்த்தக சங்கத்தினர் நேற்றுச் சேவைகளை நிறுத்தி ஆதரவுவழங்கினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66-17)

### ஆலயம்...

ளார். ஆலயத்துக்கு முன்பாக சடலம் இருப்பதை அவதானித்த பொதுமக்கள் அது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நிலையில், திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# குஜராத்தை வீழ்த்தி பெங்களூர் ஏற்றம்!

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத்தைத் தோற்கடித்து அபார வெற்றிபெற்றது பெங்களூர்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப்பெற்றது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 100 ஓட்டங்களைக் குவித்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணி ஆரம்ப வீரரான ஜேக்கப் பெதலை 14 ஓட்டங்களுடன் இழந்தாலும், படிக்கல் மற்றும் கோலி இருவரும் அபாரமாக விளையாடி அணிக்கு நம்பிக்கையை வழங்கினார்கள். 6 சிக்சர்கள் அடங்கலாக 55 ஓட்டங்களுடன் படிக்கல் ஆட்டமிழந்தார். எனினும் மறுமுனையில் கோலி நிலைத்துநின்று அபாரமாக விளையாடி அணியை வெற்றிபெற வைத்தார். அவர் 81 ஓட்டங்களைக் குவித்தார். (ம)

# மருத்துவ முகாம் கீரிமலையில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 25

கருகம்பனைப் பொது அமைப்புக்களும் யாழ்ப்பாணம் மருத்துவர்கள் சங்கமும் யாழ்.மாவட்ட மருத்துவப் பிரதிநிதிகள் சங்கத்துடன் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை கீரிமலை கருகம்பனைக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாம் நிகழ்வில் பொது மருத்துவ நிபுணர்கள், குழந்தை மருத்துவ நிபுணர்கள், தோல் மருத்துவ நிபுணர்கள், பொதுச் சத்திர சிகிச்சை நிபுணர்கள், மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் கலந்து கொள்வர். (ச-66)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.

**தொடர்பு:- 077 6234 204**

(CS 31658) A

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இந்திராணி



செட்டித்தெரு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி சாவகச் சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இந்திராணி நேற்று (24.04.2026) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகம்மா - சதாசிவம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் சுப்பிரமணியம் அவர் களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணபவா, பரமேஸ்வரி, ஈஸ்வரி மற்றும் பிரணவபவா, சூரியபவா, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோநிதி (சாவகச்சேரி), நிதிதாசன் (UK), சுதாநிதி (Swiss), நிதாகரன் (UK), நிதிகேசன் (சாவகச்சேரி), யசோநிதி (கொலன்ட்), கௌரிகாநிதி (UK), நிரேந்திரன் (UK), ஆகியோரின் அன்புத் தாயும், யோகீஸ்வரன், சுந்தரம்பிள்ளை, ரட்ணபாலு, குகனேஸ்வரன், ஹாயித்திரி, ஷாலினி, காருண்யா, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், வேணுகானன் (France), காருண்யா (சாவகச்சேரி), வேணுகஜன் (Canada), நதியா (UK), வருஷா (UK), சாருஹா (UK), கோபிராம் (Swiss), கவிஷா (UK), சாம்பவி (UK), பிரவோஜன் (UK), அபிஷா, மானுஷா, சமிஷா (சாவகச்சேரி), பானுஜா, அபிநயா (Koland), கிரிஷா (UK), பிரத்தியுமன் (UK), பிரத்தியுக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிரேஷ், ஷ்ருதிகா (UK), துவாரகேஷ், மிந்திரன் (Canada), கன்சிகா (France) ஹைறா (Koland) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 02.03.1937 — இறப்பு 24.04.2026

டச்சு வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

(cs61304) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.